தனிப்பிரதி விலை { பர்மா, மலேயா, 0-1-6 (6-

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 19-4-1947 சித்திரைமீ 6உ. { மலர் 28

## புரட்சி வாடை வீசுகிறது!

ஓராண்டிற்குப் பின் இந்தியாவை இந்தியர்களிடத்திலேயே ஒப்படைத்துவிட்டு இந்தியாவையே விட்டு வெளியேறுவதாகக் கூறும் வெள்ளையன் இந்தியர்களிடையே சில சிக்கலான திட்டங்களைப் புகுத்தி வேடிக்கை பார்க்கின்றான். அத்திட்டங்களுக்கு விரிவுரையாற்றுவதில் அரசியல் கட்சித் தலைவர்கள் என்று கருதப்படுகின்றவர்கள் மாறுபட்ட கருத்துக்களை வெளியிடுகின்றனர். அத்திட்டங்களின் விளைவு எதுவாயிருப்பினும் அது ஒருக்காலும் திராவிடநாட்டுக்குப் பயனை அளிக்காது என்பது உறுதி.

இந்தியாவின் வருங்காலத்தை நிர்ணயம் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட அரசியல் நிர்ணயசபையில் திராவிட மக்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. இந்தியாவை A. B. C. என்று மூன்று தொகுதிகளாகப் பிரித்ததில் சென்னை மாகாணத்தைப் பம்பாய் மாகாணம் சேர்ந்துள்ள A தொகுதியில் சேர்த்துள்ளனர். ஏற்கனவே சென்னை மாகாணம் பொருளாதாரத்துறையில் பம்பாய் மாகாணத்திற்கு அடிமைபட்டுள்ளது. A, B, C, என்ற தொகுதிகள் பிரிந்திடின் பொருளாதாரத் துறையில் சென்னைமாகாணம் என்றென்றும் தலைதூக்க வியலாத நிலையடைந்துவிடும் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

சென்னை மாகாணத்திலோ வென்றால் திராவிடர்களின் நிலை மிகக் கவலைக்கிடமாகவிருக்கின்றது. பணக்காரர்களும், முதலாளிகளும், பார்ப்பனர்களும் சேர்ந்து பாமர மக்களை ஏய்த்துப் பாராளுமன்றத்தில் புகுந்துகொண்டு பாட்டாளி மக்களைப் பல்வகையிலும் துன்புறுத்துகின்றனர்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளினால் திராவிடர்களின் வருங்கால நிலை பல்வகையாலும் சீர்குலைந்துவிடும் என்பது உறுதி. எனவே வருங்காலத்தில் வரப்போகவிருக்கும் கேட்டை வராமல் தடுதற்கு இப்போதே ஒரு வழிசெய்ய வேண்டுவது திராவிடர்களின் இன்றியமையாத கடமையாகும். சிறப்பாகத் திராவிட மாணவர்கள் வரவிருக்கும் கேட்டைக் தொலைத்துக்கட்ட முன்னணிப் படையிலிருந்து தொண்டாற்ற கடமைப்பட்டுள்ளார்கள்.

இன்று திராவிட மாணவர்கள் காங்கரஸ் மந்திரிசபையினரால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். தகுதி பார்த்துதான் மாணவர்கள் உயர்ந்த படிப்பு படிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்ற சட்டம் திராவிட மாணவர்களுக்குப் பெரிதும் கேடு விளைவித்துள்ளது. இச்சட்டம் செய்ததின் அடிப்படையான நோக்கம் திராவிடர்களின் முன்னேற்றத்தைத் தடுத்துப் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைப் பெருக்குவது என்பது தான்.

மேலும் ஆங்காங்குள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பார்ப்பன ஆசிரியர்கள் திராவிட மாணவர்களுக்குப் பல்வகையாலும் தொல்லைகள் கொடுத்து வருகின்றனர். பல பள்ளிக்கூடங்களில் திராவிட இன உணர்ச்சிபெற்ற திராவிட மாணவர்களைத் தேர்தலில் வெற்றிபெறாவண்ணம் ஆசிரியத் தலைமையாசிரியர்கள் மு
டுக்கட்டை போடுகிறார்கள்.

வாய்மையில் வழுவாத திருவ
ளுவரின் படத்தை வகுப்பு அ
யில் வைக்கவேண்டுமென்று தி
விட மாணவர்கள் விரும்பின
அதற்கு ஆரிய ஆசிரியர்க
பெரும் முட்டுக்கட்டைப் போடு
றார்கள். அதோடுமாத்திரமன்
'வடநாட்டுப் பார்ப்பனத் தலை
களின் படத்தைத் திறந்துவையு
க.' என்று ஞானோபதேச
செய்கின்றனர்.

வேறு சில பள்ளிகளில் கருப்
சட்டையணிந்து பள்ளிக்குச் செ
கூடாதென்றும், பெரிய
பேட்ஜை சட்டையில் குத்தி
கொண்டு பள்ளிக்குச் செல்ல
கூடாதென்றும் கட்டளையிடுகி
றனர்.

அதே நேரத்தில் வடநாட்டு
தலைவர்களின் உருவம் பதி
பேட்ஜுகளைக் கதர்ச்சட்டையி
குத்திக்கொண்டு பள்ளிக்குவரு
மாணவர்களைக் கண்டிப்
தில்லை. அதற்கு மாறாகக் கரு
புச்சட்டையணிந்து பள்ளிக்
வரும் மாணவர்களைப்பற்றி
புகார் செய்யுங்கள் என்று கத
சட்டையணிந்த மாணவர்க
ஏவி விடுகின்றனர் பார்ப்பன ஆ
ரியர்கள்.

சில தொடக்கப் பள்ளிகளி
12 வயதிற்கும் உட்பட்ட மா
வர்களை இந்துமதச் சின்னமாகி
பொட்டு இட்டுக்கொண்டுதா
வகுப்பிற்கு வரவேண்டுமென்
ஆசிரியர்கள் கட்டளையிடுகின்
னர்.

இவை யாவும் பார்ப்பன ஆசி
யர்களால் மாத்திரம் செய்ய
படுகின்றன என்று கூறுத
கில்லை. பார்ப்பனர்களின் கடை
கண் பார்வையினால்தான் கால
தைக் கழிக்கலாம் என்று கருது

ரோஜா முத்தையா

பீஷணன் குணம் படைத்த திராவிட ஆசிரியர்களில் சிலரும் பார்ப்பனர்களின் பேச்சைக்கேட்டுக் கொண்டு தங்கள் இன மாணவர்களுக்கு எல்லையில்லாத தொல்லைகளை அளிக்கின்றனர்.

சில பள்ளிகளில் மூவர்ணக் கொடிகள் பறக்க விடுவதற்குத் தலைமையாசிரியர்கள் அனுமதி அளிகின்றனர். அதே சமயத்தில் திராவிட மாணவர்கள் திராவிட முகக்கொடிகளைப் பறக்க விடுவதற்கு அநுமதியளிப்பதில்லை.

சில பள்ளிகளில் காங்கரஸ் இயக்கத்தைச் சார்ந்த குறிப்பிடத்தக்கவர்களைக்கொண்டு கூட்டம் நடத்துகிறார்கள். ஆனால் திராவிடர்க் கழகத்தைச் சேர்ந்தவர்களையோ, அல்லது 'தமிழன்' என்ற உணர்ச்சிபெற்றவர்களையோ அவர்கள் எவ்வளவு தகுதியுடையவர்களாயினும் பள்ளிகளில் மாணவர்கள் அழைத்து கூட்டத்தில் பேசவைக்கவேண்டுமென்று விரும்பினால் தலைமையாசிரியர்கள் தடைசெய்கின்றனர். தடை செய்வது மாத்திரமன்றி அப்படிப்பட்டவர்களை வரவழைக்கவேண்டும் என்று கூறும் மாணவர்களின் பிற்கால வாழ்க்கையைக் கெடுத்து விடவும் செய்கின்றனர். சில மாணவர்கள் எதற்கும் அஞ்சாது இனவுணர்ச்சிபெற்ற திராவிடத் தலைவர்களைக்கொண்டு கூட்டம் நடத்தித்தான் தீருவோம் என்று கூறினால் 'அரசியலில் சம்பந்தப்பட்டவர்கள் பள்ளிகளில் வந்து சொற்பொழிவாற்றக் கூடாது; அங்ஙனம் அவர்கள் சொற்பொழிவாற்றினால் மாணவர்கள் மனம் சிதறுண்டுவிடும். அவர்கள் செவ்வனே பாடங்களைப் படிக்கமாட்டார்கள்' என்ற பொய்க் காரணத்தைக்காட்டி இனவுணர்ச்சிபெற்ற மாணவர்களின் முயற்சியைத் தடைசெய்கிறார்கள். ஆனால் காங்கரஸ்கட்சியைச் சார்ந்தவர்கள் தகுதியிருப்பினும் இராவிடினும் பள்ளிகளில் வந்து சொற்பொழிவாற்றலாமோ வென்று கேட்கிறோம். அவர்கள் மாத்திரம் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களல்லவா? பின்னர் ஏன் திராவிட உணர்ச்சி பெற்றவர்களையும், 'தமிழன்' என்ற உணர்ச்சி பெற்றவர்களையும் பள்ளிகளில் பேச அநுமதிப்பதில்லை?

சில பள்ளிகளில் திராவிடமாணவர்கள் நன்றாகப்படித்து முதல் மார்க்குப்பெறும்வண்ணம் தேர்தல் எழுதினாலும் பார்ப்பன ஆசிரியர்கள் வேண்டுமென்றே அவர்களுக்குக் குறைந்தமார்க்கு போட்டுச் சிறிதும் தகுதியில்லாத பார்ப்பன மாணவர்களுக்கு முதல் மார்க்கு கொடுக்கிறார்கள்.

வேறு சில பள்ளிகளில் காலையில், செத்தமொழியான வடமொழியில்தான் இறை வணக்கம் பாடவேண்டும், தமிழ் மொழியில் இறை வணக்கம் பாடக்கூடாது என்று பார்ப்பன ஆசிரியர்கள் கூறுகிறார்கள். மீறித்தமிழில் தான் இறை வணக்கம் பாட வேண்டும் என்று சொல்லும் மாணவர்கள் பார்ப்பன ஆசிரியரின் சூழ்ச்சிக்கு ஆளாகாமலிருப்பதில்லை.

இன்னும் சில பள்ளிகளில் பார்ப்பன மாணவர்களுக்கெனத் தனியான உணவு விடுதிகளும், திராவிடமாணவர்களுக்கெனத் தனியான உணவு விடுதிகளும் வைத்துள்ளனர். "சமத்துவத்தையும், சமரசத்தையும் போதிக்கும் பள்ளிகளில் சாதி வித்தியாசம் ஏன்?" என்று மாணவன் கேட்டால் அப்படிக் கேட்கும் மாணவன் பள்ளியிலிருந்து நீக்கப்படுகின்றான்.

மாணவர்களின் பாடத்திட்டத்தில் திராவிடர்களை அடிமைபடுத்துவதற்குக் கருவிகளாயிருந்த புராணங்களைச் சேர்த்து அவைகளையும் படித்துத் தேர்ச்சிபெற வேண்டும் என்றுள்ளது.

சில பள்ளிகளில் திராவிட உணர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் இருப்பார்களானால் அவ்வாசிரியர்களைத் தொலைத்துக்கட்டுவதற்குப் பார்ப்பன ஆசிரியர்களும், பார்ப்பனப் பாதந்தாங்குமாசிரியர்களும் சதிசெய்கின்றனர்; மாணவர்களைத் தூண்டிவிட்டு இனவுணர்ச்சிபெற்ற நல்லாசிரியர்கள்மீது புகார் செய்யச் சொல்லுகிறார்கள். அதன் காரணமாகப் பல திராவிட ஆசிரியர்கள் வேலையினின்றும் விலக்கப்படுகிறார்கள்.

ஒருசில பள்ளிக்கூடங்களில் பார்ப்பன ஆசிரியர்கள் கருங்காலி மாணவர்களைத் தூண்டிவிட்டு ஆசிரியர்களையும் அடிக்கச் செய்கின்றனர். அடிபட்ட ஆசிரியர் மேலிடத்தில் நியாயத்திற்குச் சென்றால், பார்ப்பன ஆதிக்கம் பெற்ற மேலிடம் நீதி விழைந்து சென்ற ஆசிரியர்தான் தவறிழைத்தவர் என்று தீர்ப்பு கூறுகிறது.

சில பள்ளிகளில் திராவிட இனவுணர்ச்சிபெற்ற மாணவர்கள்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

வெளிவந்து விட்டது! விற்பனைக்குத் தயார்!!

# இராவண காவியம்

ஆசிரியர்—குழந்தை.

சிறப்புப்பாயிரம்—கவி பாரதிதாசன் அவர்கள்.
7பக்க ஆராய்ச்சி. முன்னுரை—தளபதி அண்ணாதுரை M. A. அவர்கள்.

இராம இராவணப்போர்—ஆரியர் தமிழர் போர் எனும் உண்மை கூறி, இராமாயணத்தால் தமிழர்க்குண்டாகிய இழிவைப்போக்கி, இனவுணர்ச்சி யூட்டும் சமயச் சார்பற்ற தமிழ்ப்பெருங் காவியம்.

"நான் படித்தறியும்படி பாட்டுக்கள் எளிதாக இருக்கவேண்டும்" என்ற பெரியார் ஈ. வெ. ரா. சொற்படி அமைந்த எளிய இனிய 2828 தனித்தமிழ் விருத்தப்பாக்கள். டிம்மி 520 பக்கம்.

உயர்ந்த பதிப்பு. காலிகோ பைண்ட், கண்கவர் அட்டை. விற்பனையாளர்க்குத் தக்க கழிவுண்டு. தனிப்பிரதிக்குத் தபால் கூலி 10-அணா.

விலை ரூ. 6.

கிடைக்குமிடம்:-

சிவலிங்க விலாச புத்தகசாலை, ஈரோடு.

ரோஜா முத்தையா

## திராவிடர் கழகத் தோழர்களுக்கு

மாணவர் பிரச்சாரக் குழுவினர் மே மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து தமிழ்நாட்டின் பல ஜில்லாக்களிலும் பிரச்சாரம் செய்ய வருகின்றனர். நன்றாய்ப் பேசுந் திறமையுள்ள மாணவர்களையே ஜில்லாவுக்கு இருவர் அல்லது மூவர் விதம் பிரித்தனுப்பப்படும். திராவிடர் கழகத்தோழர்கள் உள்ள ஒவ்வொரு இடத்திலும் தவறாது இச்சந்தர்ப்பத்தில் கூட்டம் நடத்திக்கொள்ள வேண்டுகிறேன். தோழர்கள் அதிகமாகக் கூட்டங்கள் அமைத்துக் கொடுத்தால்தான் மாணவர்களும் உற்சாகமாகப் பிரச்சாரம் செய்யக்கூடும். ஆண்டு முழுவதும் படிப்புக்காகக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் உழைத்து அலுத்த மாணவர்கள் தங்களுக்குக் கிடைத்த அரிய ஒன்று அல்லது இரண்டுமாத ஓய்வு காலத்தில் இனவுணர்ச்சியால் உந்தப்பட்டுப் பிரச்சாரத்திற்குச் செல்ல வருகிறார்களாதலால் அவர்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வது இயக்கத்தோழர்கள் கடமையாகும்.

கூட்டம் அமைக்க விரும்பும் தோழர்கள் கீழுள்ள மாவட்ட பிரச்சார அமைப்பாளர்களுக்கு உடனே தெரிவித்துக்கொள்ள வேண்டுமாய் வேண்டிக்கொள்கிறேன்.

### முகவரிகள்:

1. சென்னை & செங்கல்பட்டு.
   என் வி. நடராசன்,
   18, பெருமாள் முதலி தெரு,
   பெத்துநாய்க்கன்பேட்டை,
   ஜி. டி., சென்னை.
2. தென்னாற்காடு:
   புலவர் நா. மு. மாணிக்கம்,
   தமிழாசிரியர், ஆர். சி. டி.
   உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம்.
3. வடஆற்காடு:
   ஈ. திருநாவுக்கரசு,
   4, ஆசா பசார்,
   வேலூர் (வ. ஆ.)
4. தஞ்சை:
   வி. எஸ். பி. யாகூப்,
   விசயபுரம், திருவாரூர்.

டி. பி. வேதாசலம்,
வக்கீல், தென்னூர், திருச்சி.

6. மதுரை:
   டி. ஆவுடையப்பன்,
   பனகால் இல்லம்,
   சோழவந்தான்.
7. ராமநாதபுரம்:
   எஸ். எஸ். பழனிசாமி,
   மெயின் பசார்,
   அருப்புக்கோட்டை.
8. சேலம்:
   ஆர். எஸ் அருணாசலம்,
   ஜவுளி வியாபாரம்,
   செவ்வாய்பேட்டை, சேலம்.
9. கோவை:
   என். இ பாலகுரு,
   பட்டக்காரர் பங்களா,
   ஈரோடு.
10. திருநெல்வேலி:
    கே. வி. கே. சாமி,
    62, விக்டர் தெரு,
    தூத்துக்குடி.

இங்ஙனம்: செயலாளர்,
மத்திய திராவிடர் கழகம், சென்னை.

### அமைப்புக்கூட்டம்

31-3-47ல் அண்ணாமலைநகர் திருவேட்களம் திராவிடக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் கே. எ மதியழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஆ. கோவிந்தராஜு அவர்கள் தலைவராகவும், தோழர் நடராஜன் அவர்கள் துணைத்தலைவராகவும், ஆர். சுந்தரமூர்த்தி, எஸ். விசுவநாதன் ஆகிய தோழர்கள் செயலாளர்களாகவும், தோழர் கே. ராமமூர்த்தி செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## மாணவர் பிரசார

### அறிவிப்பு

1-5-47ல் ஈரோட்டில் மாண
பயிற்சி வகுப்பு பெரியார் அ
களால் துவக்கப்பெறும். சு
1வாரம் வரை நடைபெறலாம்.

மாணவர்களின் படிப்பு, பி
சார அனுபவம், பிரச்சாரத்
கலந்துகொள்ளும் காலம் இ
களை யொட்டி அழைப்பு அ
பப்படுகிறது. அழைப்புபெ
மாணவர்கள் யாவரும் தவற
வர வேண்டுகிறேன். மாண
லாத ஒரு சில இளைஞர்களுக்
பேச்சாளர்களுக்கும் அழை
அனுப்பப்படுகிறது.

தோழர்கள் படுக்கை, போ
உடை முதலியவைகளுடன் கு
தேதியில் புறப்பட்டுவரத் தயார
இருக்கவேண்டுகிறேன்.

பயிற்சி வகுப்புக்கு வரும் ஒ
வொரு மாணவரும் குறைந்த
இரண்டு கருப்புச்சட்டைகளுட
வரவேண்டும். கருப்புச்சட்
இல்லாதவர் இரண்டு கருப்பு
சட்டைகள் வாங்குவதற்குரி
பணம் கொண்டுவர வேண்
கிறேன்.

பிரச்சாரத்திற்குத் தேர்ந்தெடு
கப்படும் தோழர்கள் பிரச்சார
திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்
மாவட்டங்களுக்குப்பிரித்து அனு
பப்படுவார்கள்.

அமைப்பாளர்,
திராவிட மாணவர் பிரச்சாரக்குழு,
P. B. 325, சென்னை 2

வெளிவந்து விட்டது!

சாம்ராஜ்யங்களை அழித்த சரசிகளின் சொல்லோவியம்

# ரோமாபுரி ராணிகள்

★

C. N. அண்ணாதுரை M. A. எழுதியது.

விலை ரூ. 2-4-0.

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் : : திருச்சி.

குறிப்பு:— வியாபாரிகளுக்கு 20 சதவிகிதம் கழிவு தரப்படும். தனிப் பிரதி வேண்டுவோர் தபால் செலவு நான்கு அணா சேர்த்து மணியார்டர் அனுப்பவேண்டும்.

## ...டி அரசு

...ஓ ஏப்ரல் 19உ

## ...யும் படையும் நிதியும்

...ஸ்கட்சி என்பது (திராவிட
சுயமரியாதை இயக்கத்
...சம்பந்தம்பெற்றதின் பய
திராவிடர் கழகம் என்ப
...பெயர் மாற்றப்பட்டு ஸ்தா
பெருக்கம், அங்கத்தினர்,
படை, நிதி முதலாகிய
...களில் கவனம் செலுத்தி
...ன வேலையாக மேல்கண்ட
...ரு காரியங்களிலும் நல்ல
...ற்றம் ஏற்பட்டிருக்கிறது
...த எவரும் மறுக்கமுடி

...லாவதாகப் பெயர் மாற்ற
... திராவிட கழகம் என்ப
...ாற்றமடைந்து 2, 3 ஆண்டு
...ஆகியிருந்தாலும் அப்பெய
30 வருட காலமாய்
...ஸ்தாபனத்துக்கு இருந்து
பெயராகிய தென்
...நலஉரிமைச் சங்கம், ஜஸ்
...தி) கட்சி, பார்ப்பனரல்லா
...ட்சி என்ற பெயர்களை
...திகமாக மக்களுக்குத் தெரி
...யும், நல்ல பிரசுயாதி
...டுத், கிராமம், பட்டி,
...டி, மலை, காடு முதலிய
...களிலும் கட்சியும் கொள்கை
...கரியும்படியும் பரவி இருக்கி
...ன்பதோடு முன் குறிப்பிட்ட
...கள் எதிரிகள் சூழ்ச்சியால்
...ருக்கு எவ்வளவு சலிப்
...வெறுப்பும், அலட்சிய
குற்றம் கூறப்படக்கூடிய
...மையும் உடையதாய்க் கருதப்
வந்ததோ அவையெல்லாம்
...மடைந்து திராவிடநாட்டில்
...ட கழகம் ஒரு உண்மை
முக்கிய கட்சி என்று
...லும்படியான தன்மை
...ந்திருக்கிறது.

...துபோலவே திராவிட கழகக்
...ள்கைகளையும்பற்றி அதின்
...களால்கூட முன் போல்
...ட வேட்டை, உத்தி
...த வேட்டை, ...லம் ஆகிய

...வைகளுக்கு ஏற்பட்ட கட்சி என்று சொல்லுவதற்கு இல்லாமலும் "ஜமீன்தார்கள், சரிகைக் குல்லாய், பிரபுக்கள், மிராஸ்தாரர்கள் கட்சி" என்று சொல்லுவதற்கு இல்லாமலும் வகுப்புவாதக் கட்சி என்றுகூட சொல்லுவதற்குப் பயப்படும்படியாகவுமான ஒரு நல்ல நிலைமை பெற்று இருக்கிறது.

மேலும் கட்சி கொள்கை, தத்துவ விஷயத்திலும் நாட்டிலுள்ள வேறு எந்தக் கட்சிக்கும் அடி எடுத்துக் கொடுக்கும்படியான ஒரு முக்கிய தத்துவங்களையும் எப்படிப்பட்ட சமுதாய, பொருளாதார, சமதர்ம, தேசிய வாதிகளும் திராவிட கழகக் கொள்கைகள் என்றால் (பண்டிதர், பாவலர், காவலர், மதத்தலை மேதாவிகள், பக்தர்கள் எவரும் சு. ம. காரர்கள் என்றால் எப்படி அவர்கள் கண்களில் தென்படாமல் தப்பித்துக்கொள்ளும் அளவுக்குத் "தலைவலி" "வயிற்றுவலி" "உடல் அசௌக்கியம்" என்கின்ற திரைக்குள் மறைந்துகொள்ள முயலுவார்களோ அதுபோல்) "திராவிட கழகத்தார் பேச்சை, கொள்கைகளை மற்ற மக்கள் கேட்காமல் அவர்கள் கூட்டத்திற்குப் போக வொட்டாமல் தடுத்து மறைத்து வைத்தால்தான் நம் கூட்டத்துக்கு, கட்சிக்கு ஆள் நிற்கும், இல்லாவிட்டால் கட்சியே ஆபத்துக்கு வந்து விடும்" என்று காங்கரஸ் நேதாஜி கட்சிக்காரர் மாத்திரமல்லாமல் பொதுவுடைமைக்காரர்கள் என்கின்றவர்கள் வரையில் கூட கருதும்படியான தன்மை கொண்டது என்பதோடு காங்கரஸ் தலைவர்கள் தங்கள் கீழ்த் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் "திராவிட கழகத்தார் உங்கள் ஊரில் கூட்டம்போட விடாதீர்கள்" என்று இரகசிய உத்திரவு செய்யும்படியான தன்மை உடையதாக இருந்து வருகிறது.

கழகத்துக்கு அங்கத்தினர்கள் பெரிதும் வலியவந்து ஆளுக்கு 4 அணாவீதம் சந்தாகொடுத்து கையெழுத்திட்டு ஆர்வத்தோடு சேர்ந்த அங்கத்தினர்களே ஆவார்கள் என்பதோடு கழகக்கொள்கையையும் அதன் உண்மை தத்துவத்தையும் சரியாய் உணர்ந்தவர்களுமான 50000 பேர்கள் ஆவார்கள்.

திராவிட கழகப் பிரசாரம் என்றால் எந்தவித மேதாவித் தனமும் இல்லாமல் பேசும் திறத்தின் கூன் குருடு, மொண்டி, முடம், சப்பாணி என்று சொல்லத்தக்க எப்படிப்பட்டவரானாலும் கழகக் கூட்டம் மாத்திரமல்லாமல் எந்த மேடையிலானாலும் ஏறி ஏதோ சிறிது நேரம் கொள்கையில் கழக சம்பந்தமான எதையாவது ஒன்றைப்பற்றிச் சாதாரணமாய் உளறிவிட்டுக் கீழே இறங்கினாலும் "பேஷ், பேஷ் சரியான பேச்சு, ஒண்ணாந்தரமான சூடு, யாராலும் பதில்சொல்ல முடியாது, எவராலும் ஆட்சேபிக்கமுடியாது. அருமை, அருமை" என்று கேட்போர் பேசிக் கொண்டு செல்லும்படியாகச் செய்துவருவதான அப்படிப்பட்ட உயரிய, உண்மையான, தேவையான, யாரும் ஏற்கத்தக்கதான கொள்கைகளாகவும், மாணவர்கள் முதல் மதலைக் குழந்தைகள்கூட பிரசாரத்துக்கு ஆவலாய் போட்டி போட்டுக்கொண்டு முன்வரத் தூண்டக்கூடியதுமாகும்.

கழகத்துக்கு அங்கத்தினர்கள் விஷயத்திலும் அதற்கு 4 அணா வீதம் சந்தாக்கொடுத்து, கையொப்பமிட்டு அங்கத்தினரானவர்கள் ஐம்பது ஆயிரம் பேர்கள் இருப்பது மாத்திரமல்லாமல் ஜில்லா தாலுக்கா கிராம கிளைக் கழகங்கள் 300க்கு மேற்பட்ட எண்ணிக்கை கொண்டதும் ஆன தன்மைபெற்று இருக்கின்றது.

திராவிட கழகம் உண்மையில் இந்த நிலைபெற்று இருப்பதைப் பெரியார் மனப்பூர்வமாக உணர்ந்த பிறகே கழகத்துக்குத் தனிக் கொடியும், படையும், நிதியும் வேண்டுமென்று கருதி, கழகத்துக்கு யோசனைகூறி இவற்றை நிறையச் செய்வதைக் கழகத்தின் ஒருவருட செயல் திட்டமாக செய்யச் செய்தார். இவற்றுள்,

கொடியானது கருப்புக்கொடி என்று எண்ணம் செய்யப்படக் கூடியதாகப் பலர் கருதினாலும் முதலில் அது சாதாரணக் கொடியாகி, பிறகு போட்டிக்கொடியாகி, பிறகு எதிர்ப்புக்

ரோஜா முத்தையா

...பிரயோகப் ... பிரயோகப்பட்டு,
...கு காங்கரஸ்காரர்களுக்குப் ...பத்தை ஊட்டி அவர்களால் ...ழிக்கப்படவேண்டியதாகவும் ...ிக்கப்பட வேண்டியதாகவும் ...ு, அந்த அழிவு வேலையும் ...ந்து இப்போது எங்குபார்த்தா ...ம் ரயில் இராமபாதைகளிலும் ...பாதுமக்கள் அண்ணாந்து ...ார்த்து "மூவர்ணக்கொடி ...யரமா? இருவர்ணக் கொடி ...ருப்புக்கொடி) உயரமா? என்று ...னவை அறியும் கவனம்கொள்ள ...வண்டிய தன்மைபெற்று இருப் ...தும் 25 வருட 30 வருடமாக ...ிருந்துவரும் "தேசியக் கொடி ...ன்" மரியாதையை—தன்மையை ...ளம்பரத்தை 2 வருடக்கொடி ...டைந்துவிட்டது என்னலாம்.

...கழகத்துக்குப் படை வேண்டும் ...ன்று கருதியவுடன் அந்த நிமிட ...தலே இளைஞர்கள் போவா ...வாடு ஆங்காங்கு 100, 200, 500, ...000 என்கின்ற எண்ணிக்கையில் ...ங்களைப் பதிந்துகொண்டு கழக ...டை சின்னமாகிய கருப்புச் சட் ...டையை அணிந்து காட்சிதருவதை ...ம் தொண்டாற்றுவதையும் மிகப் ...பருமையாக இளைஞர்கள் கருது ...தையும் பார்க்கிறோம். ...றுவர் குழந்தைகளும்கூட வீட் ...ல் தின்பண்டம், நகை, கேட் ...து போல் பெற்றோர்களை ...எனக்குக் கருப்புச்சட்டை" ...ன்று கொஞ்சி, கெஞ்சி கேட் ...றதைப் பார்க்கிறோம்.

...நிதி விஷயத்திலும் கழகம் பெரி ...யார் விருப்பியபடி அதாவது "நம் ...ழக 5வருட வேலைத்திட்டத் ...ிற்கு 50ஆயிரம் ரூபாய் நிதி ...வேண்டும்" என்று கேட்டுக் ...காண்டவுடன் நிதிவசூல் வேலை ...வக்கி இன்று அதாவது ஏப்ரல் ...ாதத்திற்குள் வசூல் தொகை ...ரூ. 40,000 ஆயிரத்தைத்தாண்டி ...0 000மாக ஆக்கும் பாதை ...யில் சென்றுகொண்டு இருக்கிறது. ...0நாள் நிதி வசூல் எறக்குறைய ...0 ஆயிரத்தை நிறைவேற்றிவிடும் ...ன்றே சொல்லலாம், உறுதியும் ...காள்ளலாம்.

இனி மேற்கொண்டு என்ன ...செய்வது என்பது பலருக்கு முக் ...கிய பிரச்சினையாகும். ஆம் ...அதுஒரு முக்கிய பிரச்சினை ...தான்,

# பெரியார் துலாநிறை புகுவிழா

★

அன்புடையீர்,

வணக்கம். 1947ம் ஆண்டு மே மாதத்தில் திருவத்திபுரத்தில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு, அவர்களின் தொண்டைப் பாராட்டுவதன் அறிகுறியாகப் பெரியாரின் எடை அளவு வெண்பொற்காசுகள், அளிப்பதென முடிவு செய்துள்ளோம். நம் இயக்கத் தோழர்கள் அனைவரும் பொருளும் உழைப்பும் அளித்து இவ்விழாவினைச் சிறப்புற நடைபெறச் செய்யுமாறு உதவி செய்தருள வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

சி. வே. சுப்பராயன்,

தலைவர்.

கா. கோவிந்தன் B.O.L.

வே. சோமு

அமைப்பாளர்.

---

இஷ்டம்போல் விரும்பியபடி இஞ்சின்—யந்திரம் தயார் செய்யப்பட்டுவிட்டது. இனி ஆலைக்குப் பயன்படுத்த வேண்டியது தான். ஆனால் அறிவாளியான இஞ்சினீயர் எவனும் இஞ்சினை டெஸ்ட், பரீட்சை, சோதனை பண்ணாமல் தேவைப்பட்ட வேலையில் பிணைக்கமாட்டான். அதுபோல் கட்டுப்பாடு, படிமானம், சுயநலமற்ற தன்மை, உண்மைக் கவலை உள்ள இஞ்சினா? அல்லது வாழ்வுக்கு வகை செய்துகொள்ளுதல், பதவிக்குப் படிக்கட்டாக ஆக்கிக்கொள்ளுதல், தொழிலுக்குத் தோதாக்கிக் கொள்ளுதல், பெருமைக்குப் பிணையாககிக்கொள்ளுதல் ஆகிய புரை, பொத்தல், வீறல், வெடிப்பு, முதலிய பல குறைவுகளைக் கொண்டதா என்று நன்றாக ஒரு மடங்கு சக்தி வேண்டுமானால் இருமடங்கு சக்தி பரீட்சைக்கு நிற்கிறதா என்று பார்த்துத்தான யந்திரத்தின் வாரை—பெல்ட்டை இஞ்சின் சக்கரத்தில் மாட்டுவான்.

ஆகவே இனி இயக்கம் செய்ய வேண்டிய முதல் வேலை டெஸ்ட்—பரீட்சையும், சேப்டி—பந்தோபஸ்துமாகும். பரீட்சையும் பந்தோபஸ்தும் பார்க்கிறவர்கள் சற்று தாட்சண்யம், சலுகை, காட்டிக்கொண்டு கண்டிப்பில்லாத நிலையில் அஜாக்கிரதையாகப் பரீட்சை பார்த்தால் அதனால் ஏற்படும் கேடு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பது எந்த அறிவாளியும் உணரக்கூடும். நம் இயக்கத்திற்கு இதுவரை வந்த தொல்லையும், வரப்போகும் தொல்லையும் பரீட்சையில் கவலையற்று ஆலையை நடத்தியதேயாகும். ஆகவே ஸ்தாபன அமைப்பு பலத்தைவிட தலைவர்கள் கட்டுப்பாடு—நாணயம் பொறுப்பு ஆகியவைகளே மிகவும் பலமும் பயன் தருவதுமாகும்.

காங்கிரஸில் ஸ்தாபன அமைப்பு உண்டு, தலைவர்கள், கட்டுப்பாடு, நாணயம், பொறுப்புணர்ச்சி ஆகியவை அங்கு திராவிட கழகத்திற்கு இருப்பதைவிட மிகமிக அருமையாக இருக்கின்றன. இப்படி இருப்பதால் அங்கும் தனிப்பட்டவாகள்தான் பெரிதும பலனடைகிறார்கள். சுயநலத்துக்காக நாணயமற்று, பொறுப்பற்று அடிமையாக இருக்கிறார்கள்.

அங்கு ஸ்தாபனத்துக்கு விளம்பரம், ஆள்களுக்கு விளம்பரம், சிலருக்குப பொருளாதார தொழிலாதாரலாபம் என்பதல்லாமல் மக்களுக்கு என்ன லாபம்? நாட்டுப் பொதுப் பொருளாதார, தொழிலாதார, சமுதாயக்குறைவு நீங்கும் தன்மை ஆகியவைகளுக்கு லாபம் என்ன? எதிரிகளைப் பஞ்ச தந்திரத்தில் அழிக்கும் சூழ்ச்சிகளாலும் காலித்தனம் குழப்பம் கோரக் கொடுமை ஆகிய துஷ்ட மிருகத்தனத்தாலும், மனந்துணிந்த பித்தலாட்டத்தாலும் கூட்டுக்கொள்ளை கோஷ்டியாலும் காங்கரஸ் உயர்வாழ்கின்றதே ஒழிய அதன் அமைப்பு, ஒழுக்கம், நாணயம், பொறுப்பு, சுயநலமற்ற தன்மை ஆகியவற்றால் உயிர்வாழ்கின்றதென்று யாராவது சொல்ல முடியுமா? நல்ல அமைப்பில்லாத பார்ப்பனர்சங்கம் எப்படி வேலை செய்கிறது? எப்படிப் பலனடைகிறது என்று பார்த்தால் ஸ்தாபன

## பெரியார் வருகை

☆

மே மாதம் 3ந்தேதி சனிக்கிழமையன்று சேலம் மாவட்டம் நாமக்கல் தாலுக்காவைச் சார்ந்த பொட்டிரெட்டிபட்டிக்குப் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் வருகிறார்.

---

பலமில்லாமல் சுயநலமில்லாமல், ஒருவரை ஒருவர் ஏமாற்றித் தனி நலம்பெறும் உணர்ச்சி இல்லாமல் நல்ல பயன் பெற்று வருகிறது.

முஸ்லிம் லீகையும், அப்படிப் பிரமாதமான ஸ்தாபன பலம் என்று சொல்லிவிட முடியாது. ... யான, சுயநலமற்ற, கூட்டுப் பொறுப்பு, கண்மூடி பின்பற்றுவது என்கின்ற தன்மைதான் சமுதாயத்துக்கே நன்மை தருகிறது, உலகத்தையே பிரமிக்கச் செய்கிறது. ஆகையால் திராவிட கழகம், கொடி, படை, நிதி ஏற்பட்டப் பிறகுகூட இன்னும் பிரச்சாரத்தையே வேலைத்திட்டமாகக் கொள்ளுவதா, எதாவது கிளர்ச்சியை வேலைத்திட்டமாகக் கொள்வதா என்பதை இஞ்சினை—டெஸ்ட் செய்து பார்த்துக் காணும் முடிவைக் கொண்டதாகும்.

கூட்டுப்பொறுப்பு, நாணயமான கட்டுப்பாடு, ராணுவபடிமானத்தோடு பின்பற்றுதல், சுயநலமற்ற தொண்டு, ஊக்கம் முதலியவை கொண்ட மக்களைப் பொறுக்கி எடுக்கவேண்டியது இப்போது முக்கியமான வேலையாகும்.

நிலைமை நன்றாக இருக்கிறது. ஆறுமாதத்திலோ ஒரு வருஷத்திலோ நல்ல வேலை இருக்கிறது.

தன்னலம் துறந்த உண்மைப் படை வேண்டி இருக்கிறது, நாணயமான பிரசாரகர்கள் வேண்டி இருக்கிறது, மனவலிமையும் சண்டித்தனமும் கொண்ட பெண்கள் வேண்டி இருக்கிறது. இவைபெற்றால்தான் கொடியும், படையும், நிதியும் வேலைக்குப் பயன்படும். இல்லாவிட்டால் பிரசாரத்துக்குத் தான் பயன்படும். ஆகவே திராவிட இளைஞர்களே! அனைவரும் செய்ய உதவுவீர்கள்!

---

## கூட்டத்திற்குத் தடை உத்திரவு

5-4-47ல் காட்டுமன்னார் கோயில் திராவிட கழகத்தின் சார்பில் நடைபெறயிருந்த பொதுக்கூட்டத்தில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சொற்பொழிவாற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பொதுக்கூட்டம் நடைபெறும் செய்தி விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. இதைச் சகிக்காத காங்கரஸ் திராவிடத் தோழர்கள் பெரும் முயற்சிசெய்து கூட்டத்திற்கு 144 தடையுத்திரவு வாங்கினார்கள். அதாவது 4-4-47 முதல் இரண்டு மாதத்திற்கு எந்தவித மான கூட்டமும் காட்டுமன்னார் கோயிலில் நடத்தக்கூடாது என்பதாகும்.

இவ்வுத்திரவை அறியாது, கூட்டம் நடக்குமென்று கருதி வெளியூர்களிலிருந்து வந்த ஏராளமான மக்கள் ஏமாற்றமடைந்து திரும்ப வேண்டியதாயிற்று.

காங்காஸ்காரர்களின் இச் சூழ்ச்சிமிக்க செயலைக்கண்ட பொதுமக்கள் அடைந்த ஆத்திரத்திற்கு அளவேயில்லை.

---

## கோவை மாவட்ட திராவிடர் கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

கோவை மாவட்டத்தில் நிதி வசூல் டிக்கட் பெற்ற திராவிடத் தோழர்களுக்குப் பலமுறை அறிக்கை விட்டும், கடிதம் எழுதியும் இதுவரையில் நிதி வசூல் செய்து அனுப்பவில்லை. இம் மாதக் கடைசிக்குள் நிதி வசூலை முடித்துப் பெரியாரிடத்தில் நிதி அளிக்க முடிவு செய்திருப்பதால் தயவுசெய்து டிக்கட் பெற்றிருக்கும் தோழர்கள் தங்கள் வசூலை முடித்து இம்மாதம் 25ந் தேதிக்குள் வசூலானதொகையைக் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறேன்.

S. R. சந்தானம்,
செயலாளர்,
கோவைமாவட்ட நிதிக்கமிட்டி,
C/o குடியரசு நிலையம், ஈரோடு.

---

## பாகவதர் அப்பீல்

### 21ல் ஹைகோர்ட்டில் விசாரணை

சென்னை ஏப். 16—

லட்மிகாந்தம் கொலை வழக்கில் தோழர்கள் எம். கே. தியாகராஜ பாகவதரும், என். எஸ். கிருஷ்ணனும், தாங்கள் அடைந்த தண்டனை மீது கொடுத்த அப்பீல் பிரிவி கவுன்சிலிலிருந்து சென்னை ஹைகோர்ட்டுக்குத் திருப்பியனுப்பப் பட்டிருக்கிறது. இந்த அப்பீல் விசாரணை எப்ரல் 21ந் தேதி திங்கட்கிழமையன்று நீதிபதிகள் ஹாப்பல், சகாபுதீன் முன்பு சென்னை ஹைகோர்ட்டில் வருகிறது.

பிரிவிகவுன்சிலின் முடிவைப் பற்றி மன்னரின் உத்திரவு ஹைகோர்ட்டுக்கு இப்போழுது கிடைத்திருப்பதினாலேயே வரும் திங்கட்கிழமைக்கு அந்த அப்பீலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுகின்றனர்.

பாகவதருக்கும், கிருஷ்ணனுக்கும் பாரிஸ்டர் வி. எல். எத்திராஜும், வி. டி. ரெங்கசாமி ஐயங்காரும் ஆஜராகி வாதிப்பார்கள். சர்க்கார் தரப்புக்கு அட்வகேட் ஜெனரல் ஆஜராவார்.

## பம்பாய் தெ. இ. ஆதித் திராவிட மகாஜன சங்கம்

மேற்படி சங்கத்தின் 7வது ஆண்டு நிறைவு விழா 19-3-47ல் தாராவி தோழர் ஒ. ச. பொன்னுசாமி அவர்கள் ஞாபகார்த்தப் பந்தலில் சென்னை தோழர் கே. ஆர். தாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ந. சிவபாண்டியன், ஒ. த. அய்யாசாமி, பி. வி. மாடசாமி, கே. எஸ். ஆறுமுகம், சே. பொன்னன் பி. ஏ., கு. துரைசாமி, எ. எஸ். முத்துபாண்டியன், பி. எஸ். கோவிந்தசாமி, எக்னியஸ் சந்தானம் ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

சங்கத் துணைத்தலைவர் ஒ. சு. வேல்மயில் அவர்களின் மறைவுக்கு வருந்தியும், தாழ்த்தப்பட்டோருக்குத் தனித் தொகுதி வேண்டுமென வற்புறுத்தியும், சென்னை சர்க்காரின் பேத ஒழிப்புச் சட்டத்தை நடைமுறையில் கொண்டு வரவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறறப்பட்டன.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மிருந்திருப்பின் 'அப்பள்ளிக்கூடத்தையேஎட்டிப்பார்க்கமாட்டேன்' என்று திராவிட இனத்தில் தோன்றிய, ஆனால் திராவிடன் என்பதை முற்றும் மறந்த கல்விமந்திரியார் கூறுகிறாராம். இனவுணர்ச்சி கொண்ட தமிழாசிரியர்கள் பள்ளிகளில் திராவிட மாணவர்களுக்கு இன்றியமையாத இனவுணர்ச்சியைப் போதித்தால் அவர்கள் நாஸ்திகத்தைப் பரப்புகிறார்கள்; ஆகையால் அவர்களை ஆசிரியப் பதவியினின்றும் விலக்கிவிட வேண்டுமென்று பாராளுமன்றத்தில் பேசப்படுகின்றது.

இனவுணர்ச்சிகொண்ட மாணவர்கள் கல்விபயிலும் ஒரு பல்கலைக் கழகத்திற்கே ஆண்டுதோறும் அரசியலார் அளித்துவரும் பண வுதவியை' இறுத்திவிட வேண்டும்' என்று சட்டசபையில் கூறப்படுகின்றது.

இன்னும் போகப் போகக் காங்கரஸ் கட்சியைத் தவிர்த்து ஏனைய கட்சியை ஆதரிக்கும் எந்த மாணவனும் கல்விச்சாலையில் கல்வி பயிலக்கூடாது என்ற சட்டம் இயற்றினாலும் இயற்றுவார்கள்! யாரறிவார்?

இன்னோரன்ன குறைபாடுகளை அடுக்கிக்கொண்டே போகலாம். இவற்றிற்கெல்லாம் காரணம் நாட்டு ஆட்சியும், அதிகார பீடமும் பார்ப்பனர்களிடத்திலும், அவர்களின் அடிவருடிகளிடத்திலும் இருப்பதுதான். இந்நிலை மாறினாலொழிய திராவிட மாணவர்களின் இழிவு நீங்காது என்று திட்டமாகக் கூறிவிடலாம்.

இவற்றை மாற்றுவதற்குத் திராவிட மாணவர்கள் என்ன செய்ய முடிவு செய்துள்ளனர்? இழிநிலை மாறுவதற்கு ஒரே ஒரு மருந்துதான் உண்டு. அதுதான் இனப்புரட்சி. அதுவும் ஒற்றுமையுடன் கூடிய இனப்புரட்சிதான் எளிதில் இழிநிலையைப் போக்கும்.

இப்போது திராவிட மாணவர்கள் குறிப்பிடத்தக்க அளவில் இனவுணர்ச்சி பெற்றுவிட்டனர். இனவுணர்ச்சிபெற்ற மாணவரெல்லாம் தங்கள் இன உணர்ச்சியால் எழும் சக்திகளை ஒன்றுதிரட்டி ஓர் பெரும் புரட்சி செய்தல் வேண்டும். அங்ஙனம் பெரும் புரட்சி செய்தால்தான் திராவிட மாணவர்களுக்கு இப்போதுள்ள இழிவுகளைப் போக்கமுடியும். அப்பெரும் புரட்சிதான் பாராளுமன்றம் முதல் பஜனைமடம் வரையில் பரவியிருக்கும் பார்ப்பன ஆதிக்கத்தை அடியோடு ஒழித்துத் திராவிடர்களை மக்களாக ஆக்கும்.

இனவுணர்ச்சிபெற்று எழுச்சியுறும் மாணவர்கள் பாராளுமன்றத்தைப்பற்றிப் பொருட்படுத்தார்கள். இடைக்கால சர்க்காரைப் பற்றி இம்மியளவும் எண்ணார்கள். அரசியல் நிர்ணயசபையைப் பற்றிக் கடுகளவும் கருதார்கள். காரணம் அவர்களுக்கு நன்கு தெரியும் அவைகள் யாவும் பணக்காரத் தன்மையையும், முதலாளித்துவத்தையும், உயர்ந்த சாதித் தன்மையையும் வெள்ளையனின் ஆதரவு கொண்டு நிலைநிறுத்த ஏற்பட்ட சாதனங்கள் என்று.

இன இழிவைப்போக்க எழுச்சி பெற்ற மாணவர்கள் செய்யப் போகும் தொண்டு சற்றுக் கடினம்தான். கரடுமுரடான பாதையையன்றோ செம்மைபடுத்த வேண்டும்? என்றாலும் தாங்கள் மேற்கொண்ட பணியைச் சலியாது ஆற்றுவர் என்பது திண்ணம். காரணம் அவர்கள் உலக வரலாறுகளைப் படிப்பவர்கள், சாம்ராஜ்யங்கள் சரிவுற்ற சரித்திரங்களைப் படிப்பவர்கள்; முதலாளிகளின் ஆட்சியை ஒழித்துத் தொழிலாளர்களின் ஆட்சியை நிறுவிய தீரச்செயலை நன்குணர்ந்தவர்கள். எனவே அவர்கள் எதற்கும் அஞ்சார்கள்.

அதோ புரட்சி வாடை வீசுகிறது! கோடை விடுமுறையில் அவர்கள் மாவட்டம் தோறும் செய்யும் பிரசாரந்தான் புரட்சியின் முதல் அறிகுறி. அதுதான் புரட்சி வாடை. இப்புரட்சிவாடை வரப்போகும் பெரும் புரட்சிக்கு வித்து என்று துணிந்து கூறலாம்.

எனவே மாவட்டந்தோறும் உள்ள திராவிடர்க்கழகத் தோழர்கள் அடுத்த மாதம் தொடக்கத்தில் பிரசாரம் செய்யும் மாணவர்களை நன்கு பயன்படுத்திக்கொள்வார்களாக. உறுதியாக வருங்காலத்தில் இன இழிவுஒழியும்.

---

## வாழ்க்கை ஒப்பந்தம்

7-4-47 திங்களன்று காலை 10 மணிக்கு நீடாமங்கலம் தோழர் சிவானந்தம் அவர்கள் இல்லத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்கள் தலைமையில் ராமகிருஷ்ணன்—பக்கிரியம்மாள் வாழ்க்கை ஒப்பம் இனிது நடைபெற்றது தோழர் சரவணன் பி.ஏ. அவர்கள் சீர்திருத்தமணங்குறித்துச் சொற்பொழிவாற்றினார். தோழர் அ. ஆறுமுகம் நன்றி கூறினார். அதன் நினைவாகக் குடியரசு, திராவிடநாடு வளர்ச்சிக்கு ஒவ்வொரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.


## தலைவர்களின் படங்கள்

### விற்பனை

பெரியார், தளபதி அண்ணா, புரட்சிக்கவிஞர், இரா. நெடுஞ்செழியன், ஏ. டி. பன்னீர்செல்வம், தோழர் அர்ச்சுனன், அம்பேத்கார், ஜின்னா, ஈ. வெ. ரா. நாகம்மை, ஸ்டாலின் ஆகியோரின் படங்கள் $1\frac{1}{2}$ அடிக்கு 1 அடி அளவில் அழகிய கலரில் சிறந்த சித்திரக்காரர்களைக் கொண்டு கண்கவரும் நிலையில் தீட்டப்படுகிறது. படத்திறப்புவிழாவிற்கும் வீடுகளை அலங்கரிப்பதற்கும் அவசியமானது.

ஒன்றின் விலை ரூ 4-0-0.

தபாற் செலவு 0-9-0

விற்பனையாளருக்கு 100க்கு 20 கமிஷன் தரப்படும்.

வி. பி. பி. ஆர்டர்களே கவனிக்கப்படும்.

என். எஸ். ஜீவிபெயிண்டிங் ஒர்க்ஸ்,

நாகப்பட்டணம்.


ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# மதிப்புரை

## இராவண காவியம்

புலவர் குழந்தை அவர்களால் ஆக்கப்பெற்ற இராவணகாவியம் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இணையற்ற காவியம். புதிய தமிழகத்தின் தலைசிறந்த ஓவியம் என்றும் கூறலாம். இதைப்போன்றதொரு காவியம் இதுவரையில் தமிழகத்தில் எழுந்ததில்லை என்றே சொல்லவேண்டும்.

ஆரியத்திற்கு உயர்வும், திராவிடத்திற்குத் தாழ்வும் கற்பித்துள்ள கம்பராமாயணச் சேற்றில் சிக்கி உழன்றிடும் புராணப் பண்டிதர்களை இராவண காவியம் திக்கிடச்செய்யும் என்பதில் எத்துணையும் ஐயமில்லை. கம்ப இராமாயணத்தில் மலிந்து காணும் குறைபாடுகளைச் சுயமரியாதைக்காரர்கள் எடுத்துக்கூறியபோழ்து புராணப் பண்டிதர்கள் "கம்ப ராமாயணத்தில் காவியச் சுவை மிளிர்கின்றது உவமை நயங்கள் மலிந்துள்ளன. இதைப்போன்றதொரு காவியம் உங்களால் இயற்றமுடியுமா?" என்றெல்லாம் பல்லவி பாடினார்கள்.

ஏ! புராணப் பண்டிதர்களே! இப்போது என்ன சொல்கிறீர்கள்? இதோ புலவர் குழந்தை இராவண காவியம் தீட்டித் தந்துள்ளார்! இதில் காவியச் சுவை மிளிர்கின்றது. இது காவிய இலக்கணத்தில் வழுவாது சீரிய முறையில் அமைந்துள்ளது. கருத்திற்கொத்த புத்தம் புதிய உவமைகளும், கருத்துரைகளும் இராவண காவியத்திற்குத் தனிச் சிறப்பளிக்கின்றன. தனித்தமிழ் பூங்காவாகவும் இராவணகாவியம் இலங்குகின்றது.

ஆராய்ச்சிக்கொட்டிய முறையில் இராவணகாவியம் எழுதப்பட்டுள்ளது. வால்மீகி ராமாயணத்திலும், கம்ப ராமாயணத்திலும் இராமன் ஆண்டவனின் அவதாரம் என்று காட்டப்பட்டுள்ளது. இராவணகாவியம் ஆராய்ச்சியாளர்கள் கருத்தை அடிப்படையாகக்கொண்டு 'இராமன் ஓர் சாதாரண ஆரிய அரசனே' என்பதை வலியுறுத்துவதுடன் இராமனின் இழிக்குணத்தையும் தெளிவுபடுத்துகின்றது. திராவிடப் பேரரசனாகிய இராவணனை இழிவுபடுத்தும் மனப்பான்மையில் 'இராவணன் இரக்கமிலா அரக்கன்' என்று கூறினான் கம்பன். புலவர் குழந்தை இராவணன் 'ஓர் இணையற்ற திராவிடப் பேரரசன், சிறந்த ஒழுக்கமுடையவன்' என்ற உண்மைகளை இனிது விளக்கியுள்ளார். இராம இராவணப் போர் மக்களுக்கும், அரக்கர்களுக்கும் நடைபெற்ற போர் என்று கம்பராமாயணமும், வால்மீகி ராமாயணமும் விளிந்து கூறுகின்றன.

'ஆரியர்களுக்கும், திராவிடர்களுக்கும் நடந்த போர்தான் இராம இராவணப் போர்' என்ற ஆராய்ச்சியாளர்களின் கருத்தை இராவண காவியம் தெற்றெனப் புலப்படுத்துகின்றது. ஆரியர்களின் இழிச் செயல்களையும், திராவிடர்களின் மேன்மைகளையும் இராவண காவியம் படம்பிடித்துக் காட்டுகின்றது.

எனவே புராணப்பித்தர்களே! இதைப் படித்துப்பாருங்கள், திராவிடர்களுக்கு இழிவு கற்பித்த கம்பராமாயணத்தில் நீங்கள் கொண்ட மோகத்தை விட்டொழியுங்கள்! அப்போதுதான் நாடு உருப்படும், மக்களின் இழிவு நீங்கும்.

தோழர் சந்திரசேகரப் பாவலரால் எழுதப்பட்டு, குடியரசில் தொடர்ந்து வெளியிடப்பட்டுவந்த இராமாயண ஆராய்ச்சியில் உள்ள நுண்ணிய கருத்துக்களை இராவண காவியம் ஓரளவு தழுவியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வொப்பற்ற காவியத்தைத் தமிழர்களுக்குத் தீட்டித்தந்த ஆசிரியர் குழந்தை அவர்களின் பெருமுயற்சியும், திறமையும் பெரிதும் பாராட்டுதற்குரியன. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற எழுத்தோவியமான இராவண காவியத்தை ஒவ்வொரு திராவிடரும், சிறப்பாக ஒவ்வொரு புராணப் பண்டிதரும் படித்துப் பயன்பெறவேண்டுமென்பதும், ஒவ்வொரு நூல் நிலையத்திலும், குறிப்பாக ஒவ்வொரு திராவிடர் கழகத்திலும் இராவணகாவியம் இருத்தல் இன்றியமையாதது என்பதும் நமது அவா.

நூல் அழகான முறையில் நல்ல தாளில் அமைந்துள்ளது; சுமார் 500 பக்கங்களும், 2848 பாக்களும் உடையது. தளபதி அண்ணாதுரை அவர்களின் முன்னுரையும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பாயிரமும் காவியத்திற்குத் தனிச்சிறப்பளிக்கின்றன.

இப்பெரிய காவியத்தின் விலை 6 ரூபாய்தான்.

கிடைக்குமிடம்:-
சிவலிங்க விலாச புத்தகசாலை,
ஈரோடு.

---

## நெல்லை மாவட்டத்தில் பெரியார் ஈ. வெ. ரா.

"20-4-47லிருந்து பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் கீழ்க்காணும் இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

20-4-47 ஆத்துச்குடி (நிதி அளிப்பு விழா)
21— புதியம்புத்தூர்
22— குளத்தூர்
23— கீழஈரால்
24— காயல்பட்டினம்

வேறுபல இடங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் பெரியாருக்கு தவிர்க்கமுடியாத வேறு வேலைகளிருப்பதால் தள்ளிபோடப்பட்டது.

அன்பன்,
கே. வி. கே. சாமி,
செயலாளர்,
நெ. மா. திராவிடர் கழகம்.

---

## தமிழ்த்திருமணம் அழைப்பு

27-4-47 ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு என் குமாரன் இ. பரமசிவனுக்கும், காஞ்சீபுரம் உயர்திரு வி. சீனிவாசனவர்கள் குமாரத்தி ராஜபூஷணத்திற்கும் சென்னை கோமலீசுவரன் பேட்டை நாகப்பமுதலி தெரு 34ம் எண்ணுள்ள இல்லத்தில் திரு. டி. எம். வி. பதி அவர்கள் தலைமையில் திரு. கா. மூ. இராசரத்தினம் அவர்களால் திருமண ஒப்பந்தம் நடைபெறும். அதுகாலை பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

அன்பன்
கா. ஏகாம்பரம்,
(மேற்கு சென்னை திராவிட கழகத் தலைவர்)

---

## விற்பனைக்குத் தயார்!

எங்களிடம் 'குடி அரசு' பத்திரிகைகளை ஒவ்வொரு வருடமும் தனித்தனியாகப் பைண்டு செய்த, அதாவது 4வது வருடம் முதல் 5, 6, 7, 8, 9, 11, 12, 13, 15 17, 18, 19வது வருடம் வரையில் உள்ள வால்யூம்கள் விற்பனைக்குத் தயாரில் இருக்கின்றன. ஒவ்வொன்றின் விலை ரூ. 7-8-0. சொற்ப வால்யூம்களே கைவசம் இருப்பதால், பாதித்தொகை முன்பணத்துடன் தேவைக்கு ஆர்டர் கொடுக்கவும். வால்யூம்களை இரயில்வே பார்சல் மூலம் பெற்றுக்கொள்ள வசதி உள்ளவர்களுக்குச் செலவு குறையும்.

குறிப்பு:- 16வது வருட குடி அரசு பைண்டு வால்யூம் மட்டும் நான்கு மாதங்கள் கொண்டதாக இருப்பதால் அதன் விலை ரூ. 3-0-0.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited, Printed, and Published by N. Kariveradaswamy at the Tamillam Press 42, Catcherystreet, ERODE